2017 மார்ச் 23] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நியமனம் வழங்குவது குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் பயணித்து வரும் இந்த அரசின் பரிசீலனையில் ஏற்கெனவே உள்ளது. இதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் குறிப்பிட்ட திரு. கே. சங்கர் அவர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட, தீவிரவாதத் தாக்குதலில் பலியான இராணுவ வீரரின் வீடு குடிசையாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கு வந்திருந்தார்; அப்போது மாவட்ட ஆட்சித் தலைவரும் இருந்தார். மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை வைத்தார். இறந்த இராணுவ வீரரின் குடும்பத்தாராலும் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் அவருடைய குடும்பத்திற்கு உடனடியாக வீடு வழங்குவதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அப்போதே உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) பழனி தொகுதி, மர்ம காய்ச்சலால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

***திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6–3–2017, திங்கட்கிழமையன்று பழனி நகரம், கதவு எண் 175, 4-வது வார்டுக்குட்பட்ட பெரியப்பா நகர் பகுதியைச் சேர்ந்த சுமார் 46 வயது மதிக்கத்தக்க சுமதி என்கிற பெண்மணி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. செந்தில்குமார், சுருக்கமாகக் கேளுங்கள். தற்போது மணி 12–54 ஆகிவிட்டது. சுருக்கமாகச் சொல்லுங்கள். என்னால் நிகழ்ச்சி நிரலிற்குள் செல்ல முடியவில்லை.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *பன்றிக் காய்ச்சலால் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இறந்திருக்கிறார். அவருக்கு* Coimbatore Medical College Hospital, Department of Micro Biology–*ல் பன்றிக் காய்ச்சல் இருந்தது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியின் சுகாதாரமற்ற சூழ்நிலைதான் அவர் இறந்ததற்குக் காரணமாக இருந்தது. குறிப்பாக அதிகமான பன்றிகள் அந்தப் பகுதியில் சுற்றித் திரிகின்ற காரணத்தால் அங்கு நிறைய பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, இறந்த சுமதி என்பவருடைய குடும்பத்திற்கு நம்முடைய அரசு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 12–55

பழனி நகரம், கதவு எண் 44, பசும்பொன் முத்துராமலிங்கம் தெரு, 12 ஆவது வார்டில் வசிக்கும் முரளி–முத்துலட்சுமி ஆகியோரது ஐந்தரை வயது மகள் அனன்யா அன்பரசி கடந்த 20–3–2017 அன்று மர்மக் காய்ச்சலால் கோவை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்திருக்கிறார். பழனி தொகுதியைப் பொறுத்தளவில் பழனி நகரம் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் இன்றைக்கு சுகாதாரமற்ற சூழ்நிலையால் மர்மக் காய்ச்சல் பரவி வருகிறது. குறிப்பாக பழனி ஒன்றியத்திற்குட்பட்ட ஆ. கலையம்புத்தூர் ஊராட்சி, 2–வது வார்டில் மருது–19 வயது, மாலதி–17 வயது, பிரியங்கா–22 வயது, சந்தானலட்சுமி–17 வயது, ஆகியோர் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகக் கேளுங்கள். இவ்வளவு சூழ்நிலையிலும் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் படித்துக்கொண்டே இருந்தால் எப்படி? (குறுக்கீடு) என்னவென்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் சொல்லுங்கள் அவ்வளவுதான்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *அதேபோன்று 1–வது வார்டு, நகராஜ்–35 வயது, ஹரிஸ்ராஜ்–20 வயது, அனுசியா–14 வயது ஆகியோர் இன்றைக்குக் கடுமையான மர்மக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, கோவை மருத்துவமனையில் மருதும், மாலதியும், மதுரை மருத்துவமனையில் அனுசியாவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே சுகாதாரமற்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால்தான் இந்தப் பாதிப்புகள் உருவாகியிருக்கின்றன. எனவே, அரசு இவற்றைக்*

2017 மார்ச் 23] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

கருத்தில்கொண்டு, இறந்த அந்த இரண்டு சகோதரிகளுடைய குடும்பத்திற்கும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கி அவர்களது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்.

அதேபோல இன்றைக்கு சுகாதாரமற்றிருக்கக்கூடிய அந்தப் பகுதிகளை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதைக் களைவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கெனவே அரசு மருத்துவமனையில் டெங்கு மற்றும் பன்றிக் காய்ச்சல்களுக்கு சிகிச்சைஅளிக்க இயங்கி வந்த தனிப்பிரிவை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். அமைச்சர் புரிந்துகொண்டுவிட்டார். அவர் சொல்வார், உட்காருங்கள். நேற்று நீங்கள் கொடுத்த பேப்பரை அமைச்சரிடம் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள். நீங்கள் எழுதிக் கொண்டு வந்ததையெல்லாம் படிக்க முடியாது திரு. செந்தில்குமார். (குறுக்கீடு) உட்காருங்கள் என்றால் உட்கார வேண்டும். இதற்கு மேலே அனுமதிக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே டெங்கு உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களையும், (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதி இல்லை. நான் வாய்ப்பு கொடுத்துவிட்டேன். அவர் படித்துக்கொண்டே இருப்பதற்கு நேரமில்லை. அடுத்த நிகழ்ச்சி நிரலுக்குப் போக வேண்டும். வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) ஒரு நிமிடம்கூட இல்லை. வாய்ப்பு இல்லை, உட்காருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் டெங்கு உள்ளிட்ட அனைத்து தொற்று நோய்களையும் கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முறையான, முழுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது. தொடர் கண்காணிப்பிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், துறையும் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினாலே (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். திரு. துரைமுருகன், நான் சூடாக இல்லை. நன்றாகவே இருக்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உங்கள் உடம்பை பார்த்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: இன்றைக்கு முழுமையாக நோய் தொற்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இறுதியாகக் குறிப்பிட்ட, (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் இதை எடுத்துக்கொண்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செந்தில்குமார், நீங்கள் ஒரு மணி நேரம் நின்றால்கூட வாய்ப்பு இல்லை. நான் உங்களுக்கு கொடுத்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்தவில்லை. அனுமதி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி முடியுங்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, களையம்புத்தூர் ஊராட்சியில் 14 ஆம் தேதி முதல் 16 பேருக்கு காய்ச்சல் அறிகுறி ஏற்பட்டது. உடனே எங்களுடைய Rapid Response Team—விரைவு குழுக்கள்—சம்பவ இடத்திற்குச் சென்றனர். அவர்களால் 10 பேர் பழனி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். 7 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளார்கள். 2 பேருக்கு தொடர்ந்து அங்கே சிகிச்சை வழங்கப்படுகிறது. உடனடியாக எங்களுடைய பழனி சுகாதாரக் குழு துணை இயக்குநர் தலைமையில் ஆய்வு செய்ததில் water contamination—ஆல் ஏற்பட்ட காய்ச்சல் என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, பயப்பட வேண்டிய அவசியமோ, அச்சமோ தேவையில்லை என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி 12—வது வார்டுக்குட்பட்ட அன்பரசியை பொறுத்தவரையிலும் அவர் ஏற்கெனவே பழனியிலே காய்ச்சலுக்கு வெளி நோயாளியாக சிகிச்சைப் பெற்றார். பின்னர், அவர் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வழியிலே வலிப்பு மற்றும் புரை ஏறி மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்துவிட்டதாக பழனி துணை சுகாதார இயக்குநர் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார். அதேபோல, பழனி துணை இயக்குநருக்கும், பழனி நகர் நல அலுவலர் Municipal Health Officer—க்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. குழுக்கள் அங்கே காண்காணிப்பிலே

2017 மார்ச் 23] [டாக்டர் சி. விஜயபாஸ்கர்]

இருக்கின்றன. நோய்த் தொற்று என்பது அனைவருக்குமே வரும், cluster of fever அங்கு கிடையாது. நோய் தொற்று என்பதும் அங்கு இல்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முழு கண்காணிப்பிலே இருக்கிறது. தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு தொடர் கண்காணிப்பிலே இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

(ஆ) திருவண்ணாமலை, செங்கம் சாலையிலுள்ள அரசு மருத்துவமனை, கூடுதல் வசதிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடு)*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

4. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) பழனி தொகுதி, மர்ம காய்ச்சலால் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. துரைமுருகன் நீங்கள் கேளுங்கள்.*

பிற்பகல் 1–00

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்கிறேன்.* ஊரிலே எல்லோருக்கும் பன்றிக் காய்ச்சல் வருகிறது என்கிறார்கள். சரி, வரட்டும். காய்ச்சல் வந்தால் ஒன்றும் செய்ய முடியாது. மருந்து கொடுப்பதில் என்ன அவ்வளவு சிக்கனம்? அதை எல்லா கடைகளிலும் கொடுத்தால் என்ன? சாதாரண bunk கடைகளிலும் கொடுத்தால் என்ன? எல்லா மெடிக்கல் கடைகளிலும் கொடுத்தால்